# 9

# “நாம் இப்போது என்ன செய்ய வேண்டும்?”

## (யோவான் 15)

*“பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள். … நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள். … நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்மென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன்” (வசனங்கள் 9-17).*

ஒருவேளை, மாபெரும் சிரமம் ஒன்று - உங்கள் பிரிவிற்குப் பின்பு வாழ்வை சமாளிப்பது எப்படி என்பதைப் பற்றி உங்களுக்கு அன்பானவர்களுக்கு நீங்கள் வழிநடத்துதலை அளிக்க வேண்டிய அளவுக்கு மிகவும் கடினமான சூழ்நிலை ஒன்று - எழுகிறது என்று வைத்துக் கொள்வோம். அவர்களுக்கு நீங்கள் தரக்கூடிய அறிவுறுத்துதல் என்னவாக இருக்கும்? அவர்களுக்குக் காத்திருக்கும் கடினமான வேளைகளினூடே அவர்கள் செல்வதில் உதவியாக இருக்கும்படி நீங்கள் அவர்களுக்குக் கூறக்கூடியது என்னவாக இருக்கும்?

மேல்வீட்டில் வியாழக்கிழமை இரவில் இயேசு, தாம் கைதுசெய்யப்படுதல், அடுத்துவரும் காலையில் தமது விசாரணைகள் என்ற மூடிஅடைக்கும் திகில் மற்றும் வெள்ளிக்கிழமை காலை மற்றும் மதிய வேளையில் தொடர இருந்த, சிலுவையில் அறையப்படுதல் மூலமாக தமது பயங்கரமான மரண தண்டனை ஆகியவற்றை எதிர்கொள்வதற்கு தமது அப்போஸ்தலர்களைத் தயார்செய்துகொண்டிருந்தார். உடனடியாக அவர்கள் (திகிலினால்) மேற்கொள்ளப்பட இருந்தனர். இந்தத் துன்பங்கள் அவர்களை நசுக்கும் வலிவைக் கொண்டிருந்தன. கடைசியில் அவர்கள், தங்களின் எஜமானரும் ஆண்டவருமானவர் தங்களை விட்டுப் பிதாவினிடம் திரும்பிச் சென்றதை உணர்ந்தறிந்தபோது, அவர்களின் தனிமையின் உணர்வானது பேரழிவுக்கான செயல்விளைவுகளைக் கொண்டிருக்கலாம். இப்படிப்பட்ட பயங்கரமான மனக்கிலியை அவர்களை ஒருக்காலும் எதிர்கொண்டு இருந்தது இல்லை! அவர்கள் அறிந்திருந்த உலகமானது பொல்லாங்கான ஒன்றினால் தலைகீழாகத்

திருப்பப் பட்டிருந்தது. இந்தப் பயங்கரமான அனுபவங்களினூடே அவர்களைப் பத்திரமாகக் கூட்டிக்கொண்டு போகும்படிக்கு அவர்களுக்கு இயேசு கூறமுடிந்தது என்ன?

யோவான் 15:9-17ல் நாம், இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு முன்னால் இருந்த திகைக்கச் செய்யும் சிக்கலான வழியினூடே அவர்களை மென்மையாக வழிநடத்தியதைக் காணுகிறோம். அவர்கள் தங்களின் உடைந்த உலகத்தினுடைய துணுக்குகளைப் பொறுக்கிக் கொள்ளும் நேரம் வரும்போது, அவர்கள் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய உயிர்பிழைக்கும் சாதனப்பெட்டி ஒன்றை அவர்களுக்கு அவர் கொடுத்தார்.

## அவரது அன்பை நினைவுகூருதல்

முதலாவதாக அவர், தாம் அவர்களை எவ்வளவாக அன்புகூர்ந்தார் என்பதைச் சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டுகோள் விடுத்தார். முன்னதாக அவர்களிடத்தில் அவர், "பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்" என்று கூறியிருந்தார் (15:9). அவர்கள் அவருடைய கற்பனைகளைக் கடைப்பிடிப்பதால் அவரது அன்பில் நிலைத்திருக்க முடியும். மேலும் அவர், "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" என்றும் கூறினார் (15:13). அவர்களுக்காக அவர் மரிப்பதைப் பார்த்த பின்னர், இது அவர்களுக்காக அவர் தரமுடிந்த மாபெரும் கொடை என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

## அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல்

இரண்டாவதாக அவர், தமது வசனங்களுக்குக் கீழ்ப்படியும்படி அவர்களுக்குக் கூறினார். கீழ்ப்படிதல் என்பது எப்போதுமே சீஷத்துவத்தின் வழியாக உள்ளது. இந்தப் பின்பற்றாளர்கள் மீதான தமது அன்பின் காரணமாக இயேசு, அவர்களுக்கு மிகச்சிறந்தவற்றையே நாடினார், அவற்றையே அவர்களுக்குக் கொண்டு வந்தார். அவரது அன்பான கிருபையில் அவர்களுக்கு அவர் அளித்திருந்தவற்றில் அவர்கள் நிலைத்திருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்" (15:10).

## அவரது நண்பர்களாக இருத்தல்

மூன்றாவதாக அவர், அவர்கள் தமது நண்பர்களாக இருந்தனர் என்பதை நினைவுகூர வேண்டும் என்று கூறினார். அவர் தாம் செய்துகொண்டிருந்ததில் அவர்களைத் தமது கூட்டாளிகள் ஆக்கினார்: "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள். இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்" (15:14, 15). பிதா தாம் இந்த உலகத்திற்குக் கொண்டிருந்த தமது மாபெரும் திட்டத்தை இயேசு அறியச்செய்தார். பின்பு இயேசு, தாம்

செய்யப்போவதை அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்தி, அவர்களை இந்தத் திட்டத்திற்குள் கொண்டுவந்தார். இப்போது அவர் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதி என்ற வகையில் அவர்களுக்கு இதன் மாபெரும் கனியைக் கொண்டுவரத் தயாராக இருந்தார். வடிவமைக்கப்பட்டுள்ளவற்றிலேயே மாபெரும் திட்டமான இதில் அவரது நண்பர்களாக, கூட்டாளிகளாக இருந்தனர்.

## கனி கொடுத்தல்

*நான்காவதாக அவர் கனிகொடுக்கும்படி அவர்களைத் தாம் தேர்ந்துகொண்டார் என்பதை அவர்கள் நினைவுகூர வேண்டும் என்று அவர்களிடம் கூறினார்.* அவர்கள் தேர்ந்து கொள்ளப்பட்ட மனிதர்களாக இருந்தனர். அவர்களில் இருந்த தமது நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தினார் மற்றும் தாம் அவர்களைச் சார்ந்து இருப்பதாகவும் அவர் கூறினார். "நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; ... நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்" (15:16). அவர்கள் இந்த உலகத்தில் எஞ்சிய காலத்திற்குக் கனிகொடுக்கும்படி நிலைநிற்க வேண்டி இருந்தது. இந்த உலகத்திற்கு இந்த மனிதர்கள் தேவைப்பட்டனர். கனிகொடுப்பவர்களாக இருப்பதன் மூலம் இந்த உலகத்தில் இயேசுவின் ஊழியத்தைச் செய்வதற்கு இயேசுவுக்கும் அவர்கள் தேவைப்பட்டனர்.

## அவரது நாமத்தினாலே ஜெபித்தல்

*ஐந்தாவதாக, அவர் நாமத்தினாலே பிதாவினிடத்தில் ஜெபிக்க நினைவுகூரும்படி அவர்களிடம் கூறினார்.* அவர், "நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக" என்று கூறினார் (15:16). அவர்கள் இயேசுவின் ஊழியத்தைச் செய்வதற்குத் தேவையான எல்லாவற்றையும் கேட்பதில் அவரது நாமத்தையும் அதிகாரத்தையும் பயன்படுத்த அவர்களை அனுமதித்ததின் மூலமாக, அவர்களுக்குப் பிதாவுடனான செய்தித்தொடர்பில் நேரடியான ஒரு வசதியை இயேசு அளித்தார்.

அப்போஸ்தலர்கள் பிதாவிடம் ஜெபிப்பதற்கான வல்லமையை அவர்களுக்குத் தாம் கொடுப்பதாக இயேசு அவர்களிடம் கூறினார். அவர்களின் மாபெரும் பரிந்து பேசுபவராகத் தாம் செயல்படுவதாக, அவர்களின் ஜெபங்களைப் பிதாவின் அரியணைக்கு எடுத்துச் செல்வதாக அவர் வாக்களித்தார்.

## ஒருவரிலொருவர் அன்புகூருங்கள்

*ஆறாவதாக அவர், அவர்கள் ஒருவர் மற்றவர் மீது அன்புகூர வேண்டும் என்று கூறினார்.* "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன்" (15:17). இந்தக் கட்டளையின் பலத்தை நாம் காணுகிறோம். அவருடைய குடும்பம் ஒன்றுகூடி இருத்தல் மிகவும் முக்கியானதாக இருந்தது. அப்போஸ்தலர்கள் ஒருவரை ஒருவர் அன்பு கூர்ந்தால் அவர்கள் பெரிய செயல்களைச் செய்ய முடியும் - மற்றும் இந்த உலகம் அவர்கள்மீது வீசியெறியும் மிகமோசமான சூழ்நிலையிலும் அவர்கள்

உயிர்பிழைத்திருக்க முடியும்.

கர்த்தர் அவர்களுக்குக் கட்டளையைக் கொடுத்தது மாத்திரமின்றி, ஒரு உதாரணத்தையும் கொடுத்தார். அவர்கள் மீது அவர் அன்புகூர்ந்தது போன்று அவர்கள் ஒருவரை ஒருவர் அன்புகூர வேண்டும்: "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" (13:34). அவர்கள் ஒருவரை ஒருவர் தகுந்த வகையில் அன்புகூருவது எவ்வாறு என்பதை இயேசு அவர்களுக்குக் காண்பித்திருந்தார். அவர்கள், ஒருவர் மற்றவர் மீது கொண்டிருந்த அன்பு அவர்களைச் சுற்றிலும் இருந்தவர்களால் காணப்படக் கூடியதாக இருக்கவேண்டியதிருந்தது. அவர்களைச் சந்திக்கும் அனைவராலும் அது கவனிக்கப்படக் கூடியதாக இருக்கவேண்டியதிருந்தது (13:35).

மிக மோசமானவை வருகிறபோது நாம் எதைச் செய்வது அவசியமாக உள்ளது?

- நாம் அன்புகூரப் பட்டிருக்கிறோம் என்பதை நாம் அறிய வேண்டும்.
- இயேசுவுக்குக் கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தை நாம் அறிய வேண்டும்.
- நாம் உயர்வான ஒரு அழைப்பைக் கொண்டிருக்கிறோம் என்பதை நாம் நினைவுகூர வேண்டும்.
- நாம் மிக உயர்வான ஊழியத்தில் பங்காளிகளாக இருக்கிறோம் என்பதை நாம் அறிய வேண்டும்.
- தேவன் நமது ஜெபங்களுக்குப் பதில் அளிப்பார் என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும்.
- நாம் ஒரு குடும்பம் என்ற வகையில் வருகிற எந்த விஷயத்தையும் கையாள முடியும் என்று நாம் நம்ப வேண்டும்.

இவைகள், இரட்சகர் தமது அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த உறுதிப்பாடுகளாக உள்ளன. அவர்களுக்கு அவர் கொடுத்த ஊக்குவித்தலின் ஒவ்வொரு வார்த்தையும் அவர்களுக்குத் தேவைப்பட்டது. அவர்கள் தங்கள் இருதயங்களில் இந்த வார்த்தைகளுடன், இயேசு கைது செய்யப்படுதல், அடிக்கப்படுதல் மற்றும் சிலுவையில் அறையப்படுதல் ஆகியவற்றை எதிர்கொள்ள முன்செல்வார்கள். அவர்கள் தங்கள் சிந்தைகளில் இயேசுவின் போதனைகளுடன், உடனடியாகவும் பிற்பாடும் தங்களுக்கு நேரும் உபத்திரவங்களைச் சகிக்க முடிந்தது. இயேசுவைப் பின்பற்றுபவர்கள், முடிவு வரையிலும் ஊக்குவிக்கும் இந்த வார்த்தைகளைப் பற்றிக்கொள்ள வேண்டியிருந்தது.

## முடிவுரை

ஒரு துணைநிலை வழியில், இயேசுவின் வார்த்தைகள் அப்போஸ்தலர்களுக்கும் நமக்கும்கூட ஆச்சரியமான உறுதிப்பாடாக இருக்கின்றன. துன்பம் வருகிறபோது இவற்றை நாம் நினைவுகூர வேண்டும். சோதனைகள் வெள்ளமாகப் பெருக்கெடுத்து நம்மீது வரும்போது நாம் என்ன செய்ய முடியும்? இயேசு தமது அப்போஸ்தலர்களுக்குக் கூறியதையே நமக்கும் கூறுகிறார்: நாம், இயேசு நம்மீது கொண்டுள்ள அன்பின்மீது கவனம் குவிக்க

வேண்டும், தொடர்ந்து கீழ்ப்படிதலுக்கு நம்மையே நாம் ஒப்புக்கொடுக்க வேண்டும், நமது உயர்வான அழைப்பை நினைவுகூர வேண்டும், இயேசுவின் ஊழியத்தில் நமது பங்கை உணர்ந்து அறிய வேண்டும், இயேசுவின் நாமத்தில் தேவனிடத்தில் ஜெபிக்க வேண்டும் மற்றும் ஒருவர் மற்றவர் மீது அன்புகூர வேண்டும். இது இந்த உலகத்தை வெல்லுகிற செயல்படும் விசுவாசத்தின் வகையாக உள்ளது.

---

*"அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி? என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம். இதினாலே நாம் நம்மைச் சத்தியத்திற்குரியவர்களென்று அறிந்து, நம்முடைய இருதயத்தை அவருக்குமுன்பாக நிச்சயப்படுத்திக்கொள்ளலாம். நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார்" (1 யோவான் 3:16-20).*